மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவான விளக்கங்களைத் தந்திருக்கிறேன்.. எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் ஒரு தவறான கருத்தை இங்கே தந்து கொண்டிருக்கிறார்கள். யாரையும் கட்டாயப்படுத்தி பேருந்துகளை இயக்கச் செய்வதற்கு போக்குவரத்துக் கழகம் என்றும் ஆணையிடுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையை இத்துடன் முடித்துக் கொள்ளலாம்.

5. அறிவிப்பு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றத் குழுவுக்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவைக்கு (செனட்) கீழ்க்கண்ட மூன்று மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன :

திரு. ஆர்.டி. அரங்கநாதன், திரு. கு. சீனிவாசன், திரு. ச. அழகிரி. தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் மேற்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். அவர்களுடைய பதவிக் காலம் முறைப்படி மூன்று ஆண்டுகள் என்று இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களாக இவர்கள் பதவி வகிக்கும் காலம் வரையிலே மட்டும்தான் இப்பதவியினை அவர்கள் வகிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.